# தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
## கோயமுத்தூர் மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை
## (28.1.0.2015 முதல் 01.11.2015)

**அறிக்கை எண் 84/2015** **தேதி: 27.10.2015**

**மாநிலத்தின் கடந்த வார வானிலை**

தமிழகத்தின் பெரும்பாலான பகுதிகளில் பகல் நேர வெப்பநிலை 30°செ முதல் 34°செ ஆகவும், இரவு நேர வெப்பநிலை 19°செ முதல் 28°செஆகவும் பதிவானது. கொடைக்கானல் மற்றும் உதகமண்டலம் பகுதிகளில் பகல் நேர வெப்பநிலை 16°செ முதல் 22°செஆகவும், இரவு நேர வெப்பநிலை 8°செ முதல் 11°செ ஆகவும் பதிவானது. தமிழ் நாட்டில் பல இடங்களில் இலேசானது முதல் மிதமான மழை காணப்பட்டது.

**எதிர்பார்க்கப்படும் வானிலை கோயமுத்தூர் (28.10.2015 முதல் 01.11.2015)**

வரும் நாட்களில் வானம் பெரும்பாலும் மேகமூட்டத்துடன் காணப்படும். இலேசானது முதல் கனமழை எதிர்பார்க்கப்படுகிறது. அதிகபட்ச வெப்பநிலை 30°செ முதல் 31°செ ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 23°செ முதல் 24°செ ஆகவும், காலை நேர காற்றின் ஈரப்பதம் 72 முதல் 82 சதவிகிதமாகவும், மாலைநேர காற்றின் ஈரப்பதம் 50 முதல் 60 சதவிகிதமாகவும் பதிவாக வாய்ப்புள்ளது. சராசரியாக காற்றின் வேகம் மணிக்கு 8 கி.மீ அளவுக்கு பெரும்பாலும் கிழக்கு திசையிலிருந்து வீசக்கூடும்.

| தேதி | மழை (மி.மீ) | அதிகபட்ச வெப்ப நிலை (°செ) | குறைந்த பட்ச வெப்ப நிலை (°செ) | மேக மூட்டம் (ஆக்டா) | அதிகபட்ச காற்றின் ஈரப்பதம் (%) | குறைந்த பட்ச காற்றின் ஈரப்பதம் (%) | காற்றின் வேகம் (கி.மீ/ மணி) | காற்று வரும் திசை |
|---|---|---|---|---|---|---|---|---|
| 28.10.15 | 1 | 31 | 24 | 5 | 72 | 50 | 8 | கிழக்கு |
| 29.10.15 | 4 | 31 | 24 | 5 | 72 | 50 | 8 | கிழக்கு |
| 30.10.15 | 4 | 31 | 24 | 5 | 72 | 50 | 8 | கிழக்கு |
| 31.10.15 | 15 | 31 | 23 | 5 | 72 | 50 | 8 | கிழக்கு |
| 01.11.15 | 40 | 30 | 23 | 6 | 82 | 60 | 8 | கிழக்கு |

**வேளாண் அறிவுரை**

- ✓ வரும் நாட்களில் கன மழை எதிர்பார்க்கப்படுவதால், சம்பா நடவு செய்யப்பட்ட வயல்களில் வடிகால் வசதி செய்யவும்.
- ✓ வரும் நாட்களில் வானம் மேகமூட்டத்துடன் தென்படவும், மிதமான காற்று வீசவும் வாய்ப்புள்ளதால், சம்பா நடவு செய்யப்பட்ட வயல்களில் தழைச்சத்தை மேலுரமாக இடுவதை தள்ளி போடவும்.
- ✓ வரும் நாட்களில் கன மழை எதிர்பார்க்கப்படுவதால், இறவையில் பயிரிடப்பட்ட கம்போடியா பருத்திக்கு வடிகால் வசதி செய்யவதன் மூலம் இலைகள் மஞ்சள் நிறமாவதை தவிர்க்கலாம்.
- ✓ வானம் மேகமூட்டத்துடன் தென்படுவதுடன், காலை நேர காற்றின் ஈரப்பதம் அதிகமாக இருப்பதால், மஞ்சள் பயிரில் இலைப்புள்ளி நோய் தென்பட வாய்ப்புள்ளது. இதனை கண்காணித்து எக்டருக்கு 500 கிராம் கார்பன்டஸீம் தெளிக்கவும்.
- ✓ காற்றின் வேகம் 10 கி.மீக்கும் குறைவாக வீசும் போதும், கன மழைக்கு வாய்ப்புள்ளதால், ஐந்து மாதங்களுக்கு மேலுள்ள வாழை மரங்களுக்கு முட்டு கொடுக்கவும்.

**குறுஞ்செய்தி**

- ✓ வரும் நாட்களில் வானம் மேகமூட்டத்துடன் தென்படவும், மிதமான காற்று வீசவும் வாய்ப்புள்ளதால், சம்பா நடவு செய்யப்பட்ட வயல்களில் தழைச்சத்தை மேலுரமாக இடுவதை தள்ளி போடவும்.

**பேராசிரியர் மற்றும் தலைவர்**
**வேளாண் காலநிலைஆராய்ச்சி மையம்**
**த.நா.வே.ப.கழகம், கோவை.**